# எழுதுபொருள் மற்றும் அச்சு

மானிய கோரிக்கை எண். 30

கொள்கை விளக்கக் குறிப்பு

2012–2013

**கே.டி.ராஜேந்திர பாலாஜி**
செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள்
செயலாக்கத் துறை அமைச்சர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித் துறை

# தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை

# எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்” – குறள் 484

என்ற பொய்யாமொழிக்கேற்ப, கால வளர்ச்சிக்கு ஏற்ற நவீன வழிமுறைகளை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை தனது அச்சுப்பணிகளில் விரைவாகவும் முறையாகவும் பின்பற்றி செயலாற்றுகிறது.

தமிழ்நாடு அரசின் அரசிதழ்களை அச்சிட்டு வெளியிடும் பொருட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் பத்து பணியாளர்களைக் கொண்டு அரசு அச்சகம் 17.12.1831ல் தொடங்கப்பட்டது. இவ்வச்சகம் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்பொழுது சென்னையில் அரசு மைய அச்சகம் மற்றும் அரசு எழுதுபொருள் கிடங்கு ஆகியவற்றுடன் தமிழகம் முழுவதும் ஏழு கிளை அச்சகங்கள் என மொத்தம் ஒன்பது அலகுகளுடன் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையாக செயல்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள அரசு மைய அச்சகம் உட்பட ஏழு அரசு கிளை அச்சகங்கள் நிலைப்படிவங்கள், பதிவேடுகள், துறை சார்ந்த நடைமுறை நூல்கள், தமிழக மக்களின் இன்றியமையாத் தேவைகளான பிறப்பு–இறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பெயர் மாற்ற வெளியீடுகள் முதலியவற்றை அச்சிட்டு வழங்குவதை முதன்மைப் பணியாகக் கொண்டுள்ளன. மாநிலத்தின் அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை இலவசமாக அச்சிட்டு வழங்கி வருவதால், இத்துறை சேவைத் துறையாக செயல்படுகிறது.

## அரசு அச்சகங்கள் செயல்படும் இடங்கள்

சென்னை தங்கசாலையிலுள்ள அரசு மைய அச்சகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவை சென்னை மாநகரில் இயங்குகின்றன. அரசு எழுதுபொருள் கிடங்கும் சென்னை மாநகரில் செயல்பட்டு வருகின்றது. மதுரை மாவட்டத்தில், அரசு கிளை அச்சகம் ஒன்றும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் அரசு கிளை அச்சகம் ஒன்றும் செயல்படுகின்றன. இவை தவிர திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் ஆகிய நகரங்களிலும் அரசு கிளை அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**பணியாளர்கள் பற்றிய கண்ணோட்டம்**

இத்துறையில் மொத்தம் 1520 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவருள் 1046 பேர் ஆடவர், 474 பேர் மகளிர் ஆவர். அப்பணியாளர்களில் 167 பேர் மாற்றுத்திறனாளிகள் (ஆடவர் 137, மகளிர் 30) ஆவர். அவர்களில் 90 பேர் பார்வைத் திறன்குறைந்த மாற்றுத்திறனாளிகள், 2 பேர் செவித்திறன் மற்றும் பேசும் திறன்குறைந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் 75 பேர் பிறவகை மாற்றுத்திறனாளிகள் ஆவர்.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககமானது, செயல்திறன் மிக்க, இணக்கமான தொழில் உறவுகளைப் பேணிக் காப்பதோடு பணியாளர் நிருவாகம், பொது நிருவாகம், அனைத்து அரசு அச்சகங்களுக்குத் தேவையான ஒருமுகப்படுத்தப்பட்ட இயந்திரக் கொள்முதல், அனைத்து அரசு அச்சகங்களிலும் உள்ள இயந்திர பயன்பாட்டிற்கு தேவையான உதிரி பாகங்கள் மற்றும் நுகர்பொருட்களின் ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்முதல் போன்ற அனைத்து கொள்கை சார்ந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்திய ஆட்சிப் பணி அலுவலர் பதவித்தரத்திலான இயக்குநர், இத்துறையின் தலைமையேற்று பணிகளை நிருவகித்து வருகிறார். இதன் நிருவாகப் பிரிவிற்கு இணை இயக்குநரும், தொழில்நுட்பப் பிரிவிற்கு பொதுமேலாளரும் இயக்குநருக்கு உதவியாகப் பணிபுரிகின்றனர். எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் 5 பிரிவுகளாக அமைந்து, கீழ்க்காணும் அலுவலர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது.

- நிருவாகப் பிரிவு — இணை இயக்குநர் – வருவாய்த் துறையிலிருந்து அயற்பணியில் வரப்பெற்றுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்
- தொழில்நுட்பப் பிரிவு — பொது மேலாளர் மற்றும் துணைப் பணி மேலாளர்கள்
- கணக்குப் பிரிவு — கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து அயற்பணியில் வரப்பெற்றுள்ள முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் செலவினக் கணக்கர்.
- வெளியீடுகள் பிரிவு — உதவி இயக்குநர்.
- தொழிலாளர் நலப்பிரிவு — தொழிலாளர் துறையிலிருந்து அயற்பணியில் வரப்பெற்றுள்ள தொழிலாளர் நல அலுவலர்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககத்தில் 155 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நிருவாக அமைப்பு முறை விவரம் இணைப்பு அ—வில் இணைக்கப்பட்டுள்ளது.

**அரசு மைய அச்சகம், சென்னை—79**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் முக்கிய நிறுவனமாக பெருமைகொள்ளும் வகையில் அரசு மைய அச்சகம் பல்லாண்டுகளாக தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில் நவீன அச்சு இயந்திரங்கள் உள்ளிட்ட வெவ்வேறு வசதிகளுடன் கூடிய அச்சு இயந்திரங்களைக் கொண்டு, பல்வேறு வகையான அச்சுப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

தற்போது அரசு மைய அச்சகத்தில், மூன்று முறைமாற்றுப் பணிகளில் மொத்தம் 758 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசு மைய அச்சகம், இரு பணி மேலாளர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு நான்கு துணைப் பணிமேலாளர்கள், ஏழு உதவிப் பணிமேலாளர்கள், இரண்டு உதவிப் பொறியாளர்கள், மூன்று உதவி இயக்குநர்கள் மற்றும் ஓர் உதவி கணக்கு அலுவலர் ஆகியோர் துணை புரிகின்றனர்.

இந்த அச்சகத்தில், மிக மந்தணப் பணிகளை மேற்கொள்ளும் மிகக் கமுக்கப் பிரிவு மற்றும் வரவு–செலவுப் பிரிவு ஆகியவை ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு விடுமுறை நாட்கள் உள்ளிட்ட அனைத்து நாட்களிலும் செயல்படுகின்றன.

சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் முன்னுரிமை இனங்கள்.

- மேதகு ஆளுநர் உரை
- நிதிநிலை அறிக்கை
- அனைத்து தலைமைச் செயலகத் துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் மானியக் கோரிக்கை
- சாதனை விளக்கக் குறிப்பு
- வரவு–செலவு ஆவணங்கள்
- தமிழ்நாடு அரசிதழ்கள்
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள் மற்றும் பல்வேறு சட்டமன்றக் குழுக்களின் அறிக்கைகள்
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள்
- தேர்தல் ஆணையப் படிவங்கள், அறிவிக்கைகள் மற்றும் வாக்குச் சீட்டுகள்
- மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் அறிக்கைகள்

- மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள்
- வினாத்தாள் போன்ற மிகு மந்தண/கமுக்கப் பணிகள்
- சட்டவிதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள்
- காலமுறை வெளியீடுகள்
- நிலைப்படிவங்கள், பதிவேடுகள்
- வணிகவரித் துறைப் படிவங்கள்
- செலுத்துச் சீட்டு போன்ற கருவூலத் துறைப் படிவங்கள்
- சாதிச் சான்றிதழ்கள்

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு தலைமை நீதியரசர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைச் செயலாளர் போன்ற உயர் பதவியாளர்களுக்கான கடிதத் தாள்கள் மற்றும் உறைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு எழுதுபவர்களுக்கான சிற்றேடுகள் மற்றும் அறிவுரைகள், அரசுத் தேர்வுகள் மற்றும் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாள்கள் ஆகியவையும் இங்கு அச்சிடப்படுகின்றன.

மேற்கண்ட அச்சுப் பணிகளை முனைப்பாகவும், திறமையாகவும், கவனமாகவும் மேற்கொள்ள ஏதுவாக, அச்சுத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால வளர்ச்சிக்கேற்ப அரசு மைய அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

**அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை–1**

அரசு எழுதுபொருள் கிடங்கானது, அரசு அச்சகங்கள் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான அனைத்து வகை காகிதங்கள், அட்டைகள் மற்றும் இதர எழுதுபொருட்களான தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், படிப்பெருக்கி மை, படிப்பெருக்கித்தாள், மைப்படித்தாள் ஆகியவற்றை கொள்முதல் செய்தும், அச்சகம் தயார் செய்யும் கோடிட்ட தாள்களை சேமித்தும், அனைத்து அரசுத் துறைகளுக்கும் இலவசமாக வழங்கும் மையமாக விளங்குகின்றது. இந்த அலுவலகம், ஒரு துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் ஓர் உதவி இயக்குநருடன் செயல்படுகிறது. இவ்வலுவலகம், 107 பணியாளர்களைக் கொண்டு இயங்குகின்றது.

சிலவகைக் காகிதங்கள் தனி நேர்வாக, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. சில சிறப்பு வகைக் காகிதங்கள், அட்டைகள், மைப்படித்தாள் மற்றும் படிப்பெருக்கி மை போன்றவை தமிழ்நாடு 1998ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதன் மூலம் வெளிச்சந்தையிலிருந்து ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் ஆகியன இந்திய அரசின் வழங்கல் மற்றும் விற்பனைத் துறையின் தலைமை இயக்குநர் நிர்ணயிக்கும் ஒப்பந்த விலை வீதங்களில் கொள்முதல் செய்யப்படுகின்றன.

எழுதுபொருட்களானது, தேவைக் கோரிக்கை அளிக்கும் 3491 அரசு அலுவலகங்களுள் 3375 அலுவலகங்களுக்கு விலையேதுமின்றியும், 116 அலுவலகங்களுக்கு முன்கூட்டியே தொகை செலுத்தும் முறையிலும் குறித்த வரையறைகளுடன் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

**அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை—104**

சென்னை உயர்நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் முக்கிய நோக்கத்துடன் உயர்நீதிமன்ற வளாகத்தில் வாடகையில்லா அடிப்படையில் 1923ஆம் ஆண்டு அரசு கிளை அச்சகம் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இந்த அச்சகத்தில், உயர்நீதிமன்றத்தால் நாள்தோறும் வெளியிடப்படும் வழக்குப்பட்டியல்கள், வார மற்றும் மாத வழக்குப்பட்டியல்கள் ஆகியவற்றுடன் உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்குத் தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 93 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த அச்சகம், ஓர் உதவிப் பணிமேலாளர் மற்றும் ஓர் உதவிப் பொறியாளர் ஆகியோருடன், ஒரு துணைப் பணிமேலாளரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது.

**அரசு கிளை அச்சகம், மதுரை—7**

இந்த அச்சகம், 1976ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 134 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த

அச்சகத்தில் வருவாய், காவல், வணிக வரி, சுகாதாரம் மற்றும் பதிவுத் துறைகளின் அச்சுத் தேவைகளும் மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டங்களின் அரசிதழ்களை அச்சிடும் பணிகளும் செவ்வனே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த அச்சகம், இரண்டு உதவிப் பணிமேலாளர்கள் மற்றும் ஓர் உதவி இயக்குநர் ஆகியோருடன் ஒரு துணைப் பணிமேலாளரின் தலைமையில் இயங்குகிறது.

**அரசு கிளை அச்சகம், சேலம்**

இந்த அச்சகம், 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1986ஆம் ஆண்டு முதல் சொந்த கட்டடத்தில் இயங்குகிறது. இந்த அச்சகம், இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 67 பணியாளர்களைக் கொண்டு செயல்படுகிறது. சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி, திருப்பூர் மற்றும்

நீலகிரி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. மேலும், இந்த அச்சகம் கருவூலம் மற்றும் கணக்கு, மருத்துவம் மற்றும் அரசுத் தேர்வுகள் துறைகளின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்கின்றது. பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான 146 வகையான நிலைப்படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணிமேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

**அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி**

இந்த அச்சகம் 1965ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, அரியமங்கலம் தொழிற்பேட்டையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. 1990ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் சொந்தக் கட்டடத்தில் இயங்குகிறது. இந்த அச்சகம், இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 66 பணியாளர்களைக் கொண்டு செயல்படுகிறது. திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள், அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் பொதுப்படிவங்கள் ஆகியவை இங்கு அச்சிடப்படுகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான

126 வகையான நிலைப்படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணிமேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

**அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை**

இந்த அச்சகம், 1949ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 60 பணியாளர்களைக் கொண்டு செயல்படுகிறது. இங்கு சுற்றுச் சூழல் மற்றும் வனம், ஆதிதிராவிடர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், காவல் மற்றும் ஓய்வூதியம் ஆகிய துறைகளின் அச்சுத் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. மேலும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணிமேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

## அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

இந்த அச்சகம் 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1981ஆம் ஆண்டு முதல் சொந்த கட்டடத்தில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 53 பணியாளர்களைக் கொண்டு செயல்படுகிறது. வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன. பொதுப்பணி, வேலைவாய்ப்பு, வேளாண்மை, தொழில் மற்றும் வணிகம், தீயணைப்பு மற்றும் புள்ளியியல் போன்ற துறைகளின் 369 வகையான நிலைப்படிவங்களும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம், உதவிப் பணிமேலாளர் நிலையிலுள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

## அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை–23

இந்த அச்சகம், 2006ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தினசரி, வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்களை அச்சிடுவதற்காக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் தொடங்கப்பட்டது. இங்கு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 27 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த அச்சகம் துணைப்பணிமேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை–2.**

சென்னை அண்ணாசாலையில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்கக வளாகத்தில், அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் அமைந்துள்ளது. இதன் கிளை விற்பனை நிலையம், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் செயல்பட்டு வருகிறது.

அரசிதழ்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், சட்டத்தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், தொலைபேசி கையேடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் முதலியவை இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்விற்பனை நிலையம், இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவரமைப்பாகவும் இயங்குகிறது. அரசு வெளியீடுகள், அனுமதிக்கப்பட்ட 32 முகவர்கள் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. பெயர் மாற்றம் அல்லது மதமாற்றம் செய்ய விழைவோரின் விவரங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.415/– (அச்சுக் கட்டணம் + அரசிதழ் விலை மற்றும் அஞ்சல் செலவு) கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தூய தமிழில் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.115/– (அச்சுக் கட்டணம்+ அரசிதழ் விலை மற்றும் அஞ்சல் செலவு) மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**2011–2012**ஆம் நிதியாண்டில், தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான வெளியீட்டுக் கட்டணமாக ரூ.2,19,77,640/–ம், அரசிதழ்கள் மற்றும் வெளியீடுகள் விற்பனை மூலம் ரூ.15,32,577/–ம் ஆக மொத்தம் ரூ.2,35,10,217/– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. உதவி இயக்குநர் (வெளியீடுகள்) அவர்களின் கட்டுப்பாட்டில் இவ்விற்பனை நிலையம் செயல்படுகிறது.

## 2011–2012ல் முன்னுரிமை அடிப்படையில் அச்சிட்ட இனங்களின் பட்டியல்

முன்னுரிமை அடிப்படையில் 2011–2012ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் குறித்த காலத்தில் இத்துறையினால் செவ்வனே அச்சிட்டு வழங்கப்பட்டன.

| அச்சிட்ட இனங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| உள்ளாட்சித் தேர்தல் 2011 வாக்குச் சீட்டுகள், படிவங்கள், கையேடுகள் மற்றும் உறைகள் | 9,34,34,000 |
| பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் வேளாண் கணக் கெடுப்பு 2010–2011க்கான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் (9 வகைகள்) | 44,62,000 |

| | |
|---|---|
| அரசு தேர்வுகள் துறையின் படிவங்கள் மற்றும் விடைத்தாள்கள் | 7,81,35,000 |
| தொழில்நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாள்கள் மற்றும் கூடுதல் விடைத்தாள் புத்தகங்கள் | 31,00,000 |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் படிவங்கள் (2 வகைகள்) | 20,00,000 |
| மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர்களின் வாழ்த்து அட்டைகள்(53 நீதியரசர்கள்) | 15,900 |
| உயர்நீதிமன்றத்தின் மாத நாட்காட்டிகள் மற்றும் மேசை வைப்பு நாட்காட்டிகள் | 39,000 |
| 2012 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்பேடுகள் | 1,22,450 |
| மாநில கணக்காய்வு தலைவரின் ஆய்வறிக்கைகள் (7 ஆய்வறிக்கைகள் – தமிழ் மற்றும் ஆங்கிலம்) | 7,000 புத்தகங்கள் |
| சட்டமன்றப் பேரவை விவாதங்கள் மற்றும் குழு அறிக்கைகள் (33 இனங்கள்) | 28,380 புத்தகங்கள் |
| மோட்டார் வாகன வரி வில்லைகள் | 9,03,000 |
| இ.ஆ.ப., இ.கா.ப., இ.வ.ப., த.நா.கு.ஆ.ப. மற்றும் மாண்புமிகு நீதியரசர்களின் பட்டியல் | 5,800 |

| | |
|---|---|
| வகுப்புச் சான்று அட்டைகள் (5 வகைகள்) | 30,34,500 |
| குடும்ப நலத்துறை இயக்குநரகப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் | 6,44,000 |
| ஆசிரியர் தினக் கொடிகள் | 26,50,000 |
| விதைச் சான்றட்டைகள் | 8,00,000 |
| வணிக வரித்துறை படிவங்கள் (சி படிவம்) | 7,00,000 |
| மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை படிவங்கள் | 6,000 |
| படைவீரர் கொடிநாள் நிதி வசூலுக்கான ரசீது புத்தகங்கள் | 28,36,000 |
| தொல்லியல் துறையின் தென்னிந்தியவெட்டெழுத்துக்கள் – 2 தொகுதிகள் | 2,000 புத்தகங்கள் |

## தொழிலாளர் நலன்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் தொழிலாளர்களின் நலன் காக்க, தொழிலாளர் துறையிலிருந்து ஒரு தொழிலாளர் நல அலுவலரும், இரு உதவித் தொழிலாளர் நல அலுவலர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து ஒரு சுகாதார மேற்பார்வையாளரும் அயற்பணியில் பணிபுரிந்து

வருகின்றனர். தொழிலாளர் நலன் சார்ந்த சட்டம் மற்றும் விதிகளின்படி தொழிலாளர்களின் குறைகள் உடனுக்குடன் தீர்வு செய்யப்படுகின்றன. அரசு மைய அச்சகத்தில் மருந்தகமும் உள்ளது. மருந்தகத்தின் மருத்துவ அலுவலர், சென்னை நகரில் உள்ள இயக்ககம் உள்ளிட்ட இத்துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்குச் சென்று பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றார்.

## பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள்

**எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அரசு அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கீழ்க்காணும் படிகள் வழங்கப்பட்டுள்ளன.**

- **இரவு முறைமாற்றுப் பணிப்படி** — **2011 நவம்பர் முதல் நபர் ஒருவருக்கு, நாளொன்றுக்கு ரூ. 25/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.**

- **சிற்றுண்டிப் படி** — **2011 நவம்பர் முதல் நபர் ஒருவருக்கு, மாதம் ரூ. 200/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.**

**கூட்டுறவு நாணயச் சங்கங்களின் செயல்பாடு**

அரசு அச்சகத் தொழிலாளர் நலன் கருதி, தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் அரசு மைய அச்சகத்திலும் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்நாணயச் சங்கங்கள், சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் மூன்று இலட்சம் வரை கடனுதவி வழங்கி வருகின்றன.

**மனமகிழ் மன்றங்கள்**

பணியிடத்தில் இணக்கமான சூழ்நிலையினை உருவாக்கவும் மற்றும் பணியாளர்களிடையே காணும் விளையாட்டு ஆர்வத்தினை ஊக்குவிக்கவும் மனமகிழ் மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2011 நவம்பர் முதல் ரூபாய் இரண்டு இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.** இத்தொகை ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் வாங்கவும் செலவிடப்படுகிறது.

**கூட்டுறவு பண்டகசாலை**

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை கூட்டுறவு பண்டகசாலையானது, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் குடும்ப அட்டை பெற்றுள்ள, தற்போது பணியாற்றும் பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் சென்னை, அரசு மைய அச்சகத்தில் உள்ள நியாய விலை கடையில் பொருட்களை வழங்கி வருகின்றது. தற்போது இந்த பண்டகசாலையில் 322 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**குடியிருப்புகள் சீரமைத்தல்**

அரசு அச்சகப்பணியாளர்களுக்கு தனி நேர்வாக 1962–1963ஆம் ஆண்டில் சென்னை தண்டையார்பேட்டை காமராசர் நகரில் 300 குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டன. அக்குடியிருப்புகளில் தற்பொழுது 1/3 பங்கு குடியிருப்புகள் தங்க இயலாத அளவிற்கு பழுதடைந்து காலியாகவே உள்ளன. இவற்றை புதிய நவீனவகை குடியிருப்புகளாக கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம்**

நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் தூய்மை, பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள துப்புரவுப்பணியாளர்கள் ஒப்பந்த

அடிப்படையில் பணியாற்றுகின்றனர். மேலும், மஸ்தூர்களும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

## நிருவாக அமைப்பு

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் நிருவாக அமைப்பு, கிளை அச்சகங்களின் விவரங்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் (01.02.2012 அன்றுள்ளவாறு) இணைப்பு அ மற்றும் ஆ–வில் வழங்கப்பட்டுள்ளன.

## புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

**எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் ஆய்வு கூட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அளிக்கப்பட்ட அனுமதியின்பேரில், அரசு மைய அச்சகத்தில் அச்சுப்பணியினை நவீனப்படுத்தும் வகையில் ரூ.1.10 கோடி மதிப்பில் கணினியிலிருந்து அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

அரசு அச்சகங்களை நவீனமயமாக்கவும் மற்றும் அச்சுத் தரத்தினை உயர்த்திடவும், அரசு மைய அச்சகத்தில் இரண்டு அதிவேக அச்சு இயந்திரங்கள் 2011–2012ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

## 2011–2012 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2011–2012ஆம் ஆண்டிற்கான திட்டங்களில் ரூ.94.15 இலட்சம் அனுமதிக்கப்பட்டதற்கிணங்க கீழ்க்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- வெட்டுப்பொறி நிரலி
- உறை ஆக்கப் பொறி
- ஆளறி அடையாள அனுமதி கருவி
- ஒருமுக தைப்புப் பொறி
- கட்டுப்பொறி
- துளையிடு கட்டுப்பொறி
- தூக்குப்பொறி
- துணைப்பொறிகளுடன் கூடிய கணினிகள் மற்றும் ஒளியச்சுப்பொறி
- சிற்றுளைப்பொறி
- நகலி
- வண்ண ஒளியச்சுப்பொறி
- தடையிலி மின்வழங்கி
- தீயணைப்பான்

**2012–2013ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

பகுதி–2 திட்டங்களின்கீழ் 2012–2013ஆம் ஆண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கென ரூ.95.85 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் கொள்முதல் செய்ய திட்டம் இடப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் இணைப்பு இ–ல் வழங்கப்பட்டுள்ளன.

**வரவு–செலவு**

2012–2013ஆம் ஆண்டிற்கான எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் வரவு செலவு விவரங்கள் பிற்சேர்க்கை ஈ–ல் இணைக்கப்பட்டுள்ளது.

**தகவல் பரவலாக்கம்**

வளர்ந்து வரும் அறிவியல் தகவல் தொழில் நுட்ப மாற்றத்திற்கேற்ப எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. இத்துறை குறித்த தேவையான செய்திகள் மற்றும் விவரங்களை அனைவரும் பெற வசதியாக, இத்துறைக்கென அலுவல் முறை வலைதளம் அமைந்துள்ளது. அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவன சரிவு, நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள், பெயர் மாற்றம் மற்றும் மத மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு

அரசிதழ்கள் ஆகியவை துறையின் வலைதளம் http://www.tn.gov.in/stationeryprinting-ல் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்வலைதளம் மூலம் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து பெறலாம்.

மேலும், **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு மைய அச்சகப் பணியாளர்களை ஊக்கப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஜப்பான் நாட்டின் கைசென் முறையில் (Kaizen Method) தரக்கட்டுப்பாடு பயிற்று முறை அறிமுகப்படுத்தப்படும்.**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஏறத்தாழ 180 ஆண்டுகளாக தமிழக அரசின் அனைத்துத் துறைகளின் அச்சுப்பணிகள், காகித வகையினங்கள் மற்றும் எழுதுபொருள் தேவைகளை தொய்வின்றி ஊக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும் சிறப்புற நிறைவு செய்து வருகிறது. தனி மனிதனின் இன்றியமையாத் தேவையான பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் போன்றவை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் மூலமாகவே அச்சிட்டு வழங்கப்பட்டு வருவதால் இத்துறை சேவைத்துறையாக செயல்பட்டு வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையை இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மேம்படுத்த அரசு அச்சகங்களில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு நவீனமயமாக்கப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் இத்துறை மேலும் சிறப்புடனும், முனைப்புடனும் தனது பணிகளை செயலாற்றும் என்பது திண்ணம்.

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது”** – குறள் 101

**என்ற திருக்குறள் நெறிக்கேற்ப கேட்டவைகளையும், வேண்டியவைகளையும் தேவையறிந்து விரைந்து நிறைவேற்றும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை எங்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை நன்றிக் கடப்பாட்டுடன் வணங்குகிறது.**

அரசின் அனைத்து அச்சகப் பணியாளர்களும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டு நெறிகளைக் கடைபிடித்து தங்கள் பணிகளைத் திறம்பட செயலாற்றுவதற்கு உறுதி பூண்டுள்ளனர்.

**கே.டி.ராஜேந்திர பாலாஜி**
செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள்
செயலாக்கத் துறை அமைச்சர்

**இணைப்பு—அ**

**நிருவாக அமைப்பு**



## இணைப்பு –ஆ

## 01.02.2012 அன்றைய நிலையில் பணியாளர் எண்ணிக்கை

| அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர் | இதர பிரிவு | 01.02.2012 அன்றைய நிலையில் பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| இயக்ககம் (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட) | 11 | 133 | 11 | 155 |
| அரசு மைய அச்சகம், சென்னை–79 | 18 | 156 | 584 | 758 |
| அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1 | 2 | 60 | 45 | 107 |
| அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104 | 2 | 18 | 73 | 93 |

| | | | | |
|---|---|---|---|---|
| அரசு கிளை அச்சகம், மதுரை–7 | 4 | 18 | 112 | 134 |
| அரசு கிளை அச்சகம், சேலம் | 1 | 7 | 59 | 67 |
| அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 1 | 12 | 47 | 60 |
| அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி | 2 | 10 | 54 | 66 |
| அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 1 | 7 | 45 | 53 |
| அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை–23 | 2 | 7 | 18 | 27 |
| மொத்தம் | 44 | 428 | 1048 | 1520 |

## இணைப்பு–இ

### பகுதி – II திட்டங்களின்கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள இயந்திரங்களின் விவரம்

| இயந்திரங்கள் | எண்ணிக்கை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் | 15 | 7,50,000 |
| எண்மிய அஞ்சல் வில்லை பதிவு இயந்திரம் | 2 | 2,20,000 |
| மின்னணு எடை இயந்திரம் | 2 | 50,000 |
| வெட்டுப் பொறி நிரலி | 1 | 18,00,000 |
| ஒருமுக தைப்புப் பொறி | 3 | 6,00,000 |
| ரிம்மிங் இயந்திரம் | 1 | 50,000 |
| உறை வெட்டும் இயந்திரம் | 5 | 32,50,000 |
| 2 டன் அளவு திறன்கொண்ட குளிரூட்டு சாதனம் | 1 | 35,000 |
| தீயணைப்பான் | 75 | 4,50,000 |
| எண்ணிடும் இயந்திரம் | 54 | 16,20,000 |
| கேம்ஸ் வளையங்கள் | 22 | 7,60,000 |
| மொத்தம் | | 95,85,000 |

## இணைப்பு – ஈ

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
## வரவு – செலவு திட்ட மதிப்பீடு 2012 – 2013

| | | நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | 2011–12 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2011–12 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2012–13 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு |
| **2058** | எழுதுபொருள் மற்றும் அச்சிடுதல் | **77,10,09** | **76,72,26** | **76,06,96** |
| **2059** | பொதுப்பணிகள் | **65,00** | **65,00** | **65,00** |
| **4058** | எழுதுபொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | **1** | **–** | **1,10,00** |
| மொத்தம் | | **77,75,10** | **77,37,26** | **77,81,96** |